Registered as a news paper. பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 23 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 07 (06.05.2006) சனிக்கிழமை இதழ் 219

# இலங்கை அரசுக்கு ஆயுதங்களை ஒருபோதும் இந்தியா வழங்காது!

## வெளிவிவகார அமைச்சு பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கை அரசுக்கு எந்தவொரு ஆயுதங்களையோ வெடிபொருட்களையோ வழங்குவதில்லை என்ற நிலைப்பாட்டில் இந்திய அரசு உறுதியுடன் இருப்பதாகவும், அதேவேளை வேறெந்த நாட்டிடமிருந்தும் இலங்கை அரசு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது குறித்து கவலையடைப் போவதில்லை என்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

புதுடெல்கியில் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நவஜோத் சர்ணா இது இந்திய அரசின் நிலைப்பாட்டை வெளியிட்டார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நாளை இந்தியாவுக்கு 3 நாள் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். 6 மாதங்களுள் 3 ஆவது தடவையாக இந்தியா செல்லும் இவர் இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாகவும் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டையும் கோருவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து புதுடெல்கியில் செய்தியாளர்களிடம் பேசும்போதே இந்திய வெளிவிவகார அமைச்சு பேச்சாளர் புதுடெல்கி அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார்.

பல்வேறு நாடுகளிடமிருந்து இராணுவ தளபாடங்களை வாங்குவதன்மூலம் இந்தியாவை பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடொன்றை செய்துகொள்வது குறித்து கரிசனை கொள்ள வைக்க முடியுமென இலங்கை அரசு கருதுகிறது.

ஆனால், புதுடெல்கி இப்போது சீனா உட்பட எந்தவொரு நாட்டிடமிருந்தும் இலங்கை அரசு

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கொன்ஸ்டபிள் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகே அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலை மீது அடையாளம் தெரியாத நபர்கள் நேற்று முற்பகல் 11.35 மணியளவில் தாக்குதல் நடத்தினர்.

இதன்போது எம்.விஜிசிறீ (வயது39) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இந்தக் காவல் நிலையில் மூன்று பொலிஸார் இருந்தபோதும் (08 ஆம் பக்கம் பார்க்க)

## விமான, கடற்படைகள் இணைந்து படகுகள் மீது கடும் தாக்குதல்!

கொழும்பு —

புத்தளம் - குதிரைமலை கடற்பரப்பில் கடற்படையினரும் விமானப்படையினரும் இணைந்து தாக்குதல் நடத்தியதில் விடுதலைப் புலிகளின் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தரப்பு தெரிவித்தது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் கற்பிட்டி - பழுகல்துறை கடற்பரப்பில் இரண்டு படகுகளை அவதானித்த கடற்படையின் இரு படகுகள் - அவற்றைச் சோதனையிட முயன்றபோது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதையடுத்து கடற்படையினர் பதில் தாக்குதல் நடத்தவே, மேலும் இருபடகுகள் அந்த இடத்துக்கு விரைந்து வந்தன.

அப்போது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வெடிபொருட்களுடன் இருந்ததாக கூறப்படும் படகு ஒன்று வெடித்துச்சிதறியதாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.தசநாயக்க தெரிவித்தார்.

இந்த நிலையில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## நாவலர் வீதியில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு!

யாழ்ப்பாணம் —

யாழ்.நாவலர் வீதியிலுள்ள நமது ஈழநாடு அலுவலகத்துக்கு முன்பாக நேற்றிரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

நேற்றிரவு 7.30 மணியளவில் நமது ஈழநாடு அலுவலகத்துக்கு வெளியே திடீரென துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அதேவேளை, குறிப்பிட்ட பிரதேசத்தில் பெருமளவு படையினரின் நடமாட்டமும் காணப்பட்டது. எனினும், துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிளைமோர்; ஆறு பேர் படுகாயம்!

## தாக்குதல்களை தீவிரப்படுத்தப்போவதாக

## வல்வெட்டித்துறையில்

வவுனியா

வவுனியா - வைரவப்புளியங்குளம் ரயில் நிலைய வீதியில் நேற்றுப் பிற்பகல் 1.10 மணியளவில் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் மூன்று பொலிஸார் உட்பட ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

பொலிஸாருக்கு உணவு எடுத்துச் சென்ற ஜீப் வண்டியை குறிவைத்து வீதியோர வேப்ப மரம் ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்ட கிளைமோர் குண்டு வெடித்தே 3 பொலிஸார் மற்றும் எட்டு வயதுச் சிறுமி உட் பட 3 பொதுமக்களும் படுகாயமடைந்தனர்.

தற்போது புளொட் இயக்கத்தின் அலுவலகமும் பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்றும் இந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# பொங்கியெழும் மக்கள் படை அறிவிப்பு!

யாழ்ப்பாணம்

அப்பாவி தமிழ் மக்களை படுகொலை செய்து வரும் அரச படைகளுக்கு எதிராக தாக்குதலை தீவிரப்படுத்தவுள்ளதால் - இராணுவ நிலைகள், முகாம்களுக்கு அருகில் இருக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறு யாழ். மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை வேண்டுகோள் விடுத்துள்ளது.

குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இராணுவத்தினருக்கு எதிராக தொடரப்போகும் கடும் தாக்குதல்களுக்கு ஒத்துழையுங்கள் என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சிங்களப் படைகள் கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை என தமிழின அழிப்பினை மேற்கொண்டதுபோல் யாழ்.குடாநாட்டிலும் தமது அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை மூடி மறைப்பதற்கு ஊடகவியலாளர்கள் மீதும், ஊடகங்கள் மீதும் தாக்குதல் நடத்தத் தொடங்கி விட்டார்கள்.

புத்தூரில் ஐந்து தமிழ் இளைஞர்களை படுகொலை செய்ததுபோல், பட்டப்பகலில் வடமராட்சி நவிண்டில் பகுதியில் வைத்து இராச கிராமத்தைச் சேர்ந்த

(08 ஆம் பக்கம் பார்க்க)

# இரு படையினர் பலி!

யாழ்ப்பாணம்

வல்வெட்டித்துறை - ஆதிகோவிலடிப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்று நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்று பிற்பகல் 2.05 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் ஒருவர் படுகாயடைந்தார்.

படுகாயமடைந்த சிப்பாய் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

# அரசாங்க நிர்வாக செயற்பாடுகளை முடக்க பொது அமைப்புக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டில் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருவதை கண்டித்தும் இன்று முதல் அரச நிர்வாகங்கள், கல்வி மற்றும் நீதி நிர்வாகங்களை பகிஷ்கரிக்குமாறு யாழ். மாவட்ட தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பேச்சு பேச்சு என்று நாடகம் ஆடிக்கொண்டிருக்கும் அரசு தமிழர் பிரதேசங்களில் படுகொலைகளை தீவிரப் படுத்தியுள்ளது. இவ்வாறான சிங்கள படைகளின் கொலை வெறியாட்டத்தினால் சுடுகாடாகி வரும் யாழ். குடாநாட்டை அரச பயங்கரவாதத்தில் இருந்து மக்களை விடுவிக்க அரசும் சர்வதேச சமூகமும் மௌனம் சாதித்து வருகின்றமை மக்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவத்தினரின் திட்டமிட்ட கொலைகளை சர்வதேச சமூகத்துக்கு

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கிளைமோரில் பொலிஸ் வாகனம் சிக்கியது!

யாழ்ப்பாணம்

வடமராட்சியில் புறாப்பொறுக்கி ஆலடிப்பகுதியில் நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் நால்வர் படுகாயம் அடைந்தனர்.

நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. யாழ். - பருத்தித்துறை வீதியில் புறாப் பொறுக்கி, ஆலடிப் பகுதியில் உள்ள வீதியோர பாம்புப் புற்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டே வெடித்ததாகத் தெரியவருகிறது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் மீதான இராணுவ வன்முறைகள் தன்னாட்சி கோரிக்கையை வலுப்படுத்தும்

## அவுஸ்ரேலிய எம்.பி அறிக்கை

கொழும்பு

இலங்கையில் தமிழர்கள் மீதான அரச படையினரது வன்முறைகளானது - தமிழர்களின் தன்னாட்சியைத்தான் வலுப்படுத்தும் என்று அவுஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மேர்பி தெரிவித்தார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தை செயற்படுத்துவதன் மூலமே வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவரமுடியும்.

கடந்த ஏப்ரல் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் அரச படையினர் நடத்திய விமானத்தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். குறைந்த பட்சம் 15 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்று ஊடகச் செய்திகள் தெரிவித்தன.

இராணுவத்தளபதி மீதான தாக்கு

(08 ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திரமான கல்வியைப் பெறவேண்டுமாயின் மாணவர்கள் போராட்டத்தில் இணையவேண்டும்

## யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்—

இராணுவத்தினரை தாயகத்தில் இருந்து விரட்டி அரசினால் சீரழிக்கப்பட்ட எமது கல்வியை சுதந்திரமாக பெறுவதற்காக தாயக மீட்புக்கு அணி திரளுமாறு யாழ் மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

காலம் காலமாக தமிழ் மாணவர்கள் மீதான சிங்களப் பேரினவாத அரசினுடைய கல்வி அடக்கு முறை தீவிரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தரப்படுத்தலில் தொடங்கிய கல்வி அடக்குமுறையின் ஆரம்ப வடிவம் உருப்பெற்றதில் இருந்து இன்று வரை மாணவர்கள் மீது பல்வேறு வடிவங்களில் அடக்கப் படுகின்றனர்.

மாணவர்கள் மீதான அடக்கு முறை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் ஆரம்பித்த மாணவர்களின் போராட்டம் இன்று வரை நடந்து வருகின்றது.

விடுதலை பெற்றால் தான் மாணவர் கல்விக்கு விடிவெனக் கருதிய மாணவர்கள் ஆயுதம் ஏந்திப் போர் புரிந்து தாயகத்தின் பல பாகங்களை மீட்டு அங்கு சுதந்திரமான கல்வியை ஏனைய மாணவர்கள் கற்பதை உறுதி செய்துள்ளனர்.

ஆனால் சிங்கள அரசின் பிடியில் இருந்து வருகின்ற யாழ் குடாநாடும் ஏனைய தாயகத்தின் பாகங்களும் கல்வி அடக்கு முறையால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன. ஒரு சமூகத்தினை அழிக்க வேண்டுமென்றால் அந்தச் சமூகத்தின் கல்வி பெறும் வழிகளை அழிக்க வேண்டும் என்கின்ற யதார்த்தத்தை உணர் ந்து கொண்ட அரசு தன் படைகளைக் கொண்டு தமிழர் கல்வியை சீரழித்து மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கி வருகின்றது.

பாதுகாப்பு வலயம், பொருளாதாரத் தடைகள், தாக்குதல்கள், படுகொலைகள், மாணவர் மீதான வன்முறை உலகத்தில் என்றுமில்லாதவாறு நடைபெற்று வருகின்றன. குடாநாடெங்கும் பாதுகாப்பு வலயமென முட்கம்பி வேலிகளுக்குள் முடங்கிப் போய்க் கிடக்கும் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் கல்வியை இழந்து நிற்கின்றார்கள். நிலபுலம் சுவீகரிக்கப்பட்டிருப்பதனால் அகதி முகாம்களில் அல்லல்பட்டு கல்வியை இழந்திருக்கின்றனர்.

பாடசாலைகளைச் சூழ்ந்தும், குறிப்பாக மகளிர் பாடசாலை களைச் சூழ்ந்து அமைந்துள்ள படை முகாம்கள், சிங்கள பொலிஸாரின் தளங்கள் என்பன மாணவர் மனநிலையில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தி அவர் கல்வியில் குந்தகத்தை ஏற்படுத்தி நிற்கின்றது. மாணவர்களிடையே இராணுவப் புலனாய் வாளர்கள் ஊடுருவி மாணவர்களை சிதைக்கும் நோக்கோடு ஆபாசப்பட பிரதிகளும், போதைப் பொருட்களும் வழங்கி மாணவர்களை திசை திருப்பி வருகின்றனர்.

அண்மைக்கால யாழ் குடாநாட்டு சம்பவங்கள் மாணவர்களை என்றுமில்லாதவாறு கல்வி சீரழி யுமோ என்கின்ற அச்ச உணர்வை தோற்றுவித்திருக்கின்றது. மாணவர்கள் கண்மூடித்தனமாக புறாக்கள் சுடுவதைப் போன்று சுடப்படுகின்றார்கள். கடத்திக் கொல்லப்படுகின்றார்கள். ஆரம்பத்தில் கிருசாந்தி, சஞ்சீவன், கோபினாத் என சித்திரவதை செய்தும் புதுக்குடியிருப்பில் நாகர் கோவிலில் குண்டு வீசியும், மாணவர்களை படுகொலை செய்து இராணுவம் இன்று மாணவர் கொலை செய்யப்படுகின்ற தன்மையில் அதிகரித்துள்ளது.

வீதிகளிலே மாணவர்கள் தாக்கப்படுகின்றார்கள். தட்டிக் கேட்க எவருமின்றி அடிமை மாடுகள் போல் மாறி மாறி முதுகைக்க காட்டி அடிவாங்கியே பள்ளி செல்கின்றார்கள். தமிழ் மாணவிகள் இனவெறி இராணுவங்களால் பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். இந்தப் பிரச்சினைகள் காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் இன்று பலமாக அதிகரிக்கப்பட்டு ஒவ்வொரு தமிழ் பேசும் மாணவர்களின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

அன்றிலிருந்து இன்றுவரை அடக்கு முறையை மாணவர்கள் கடுமையாக அகிம்சை ரீதியாக போராடினோம். கால்கள் தேய கண்டனப் பேரணி நடத்தினோம். கண்ட கண்ட இடமெல்லாம் எமது குறை சொல்லி காலில் விழுந்தும் மன்றாடினோம். வாகனங்களில் வட்டமிட்டுத் திரியும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்களும், ஏனைய் வெள்ளைக்கார நிறுவனங்களும் எம் துன்பத்தை பார்த்து சிரித்தபடி திரிந்தன. கொடும்பாவிகள் கட்டி கொளுத்தி பாவம் தீர்க்கப் பார்த்தோம் பயன் ஏதும் காணவில்லை. பலமுறைகள் சிங்கள அரசுக்கு அழுத்தம் கொடுத்தோம் அசையவில்லை.

அவர்களின் எண்ணத்தில் மாற்றம் காணாது மாணவர் மீது ஆக்கிரமிப்பு கரத்தை பலமாக அழுத்தி வருகின்றது. சிங்களப் பேயரசின் ஆட்சியில் எமக்கு விடிவு கிட்டும் என்ற நம்பிக்கை அறவே இல்லாது போய் விட்டது. சர்வதேசத்தின் பாரா முகம் எங்களை வேதனை அடைய வைத்துள்ளது. அத்தோடு மாணவர்களை விரக்தியின் விளிம்புக்குத் தள்ளி அவர்களின் உணர்வுகளை கிள்ளி விட்டுள்ளது.

இராணுவ பயங்கரவாத அரசிடமிருந்து நாம் எதனையும் கெஞ்சிப் பெற முடியாது என்பதை நன்கு உணர்த்தி ஆயுதம் ஏந்தி போராட வேண்டும் என்கிற உண்மையை உணர்த்தி நிற்கின்றது. நாம் போராடப் போகும் வரை கல்வியும் இல்லை, கல்லூரிகளும் இல்லை.

எனவே வெள்ளுடை தரித்த மாணவர்கள் வேங்கைப் புலியாக பகை மீது பாய வேண்டும். படாத பாடுபடுத் திய இராணுவத்தினை எம் தாயகத் தேசத்தில் விடாது விரட்ட வேண்டும். எனவே யாழ் குடாநாட்டு தமிழ் பேசும் மாணவர்கள் இந்த வரலாற்றுக் கடமையை கையிலேந்தி எமது தாயக மண்மீட்புக்காக அணி திரண்டு வாருங்கள். நாமில்லா விட்டாலும் சுதந்திரமான கல்வியை எமது எதிர்காலச் சந்ததியாவது பெறட்டும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## அடையாள அட்டை கிடைக்கவில்லை

# கிராம அலுவலருக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து ஒன்றரை வருடங்களுக்கு மேலாகிய நிலையிலும் அடையாள அட்டை கிடைக்கவில்லையென தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

கைதடி நாவற்குழியைச் சேர்ந்த வேல்முருகன் நகுலேஸ்வரன் என்பவரே ஜே249 பிரிவு கிராம அலுவலருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்:-

தேசிய அடையாள அட்டை தொலைந்ததையடுத்து மேற்படி நபர் புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்தார். எனினும் ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் அடையாள அட்டை கிடைக்கவில்லை.

இதனையடுத்து அவர் கொழும்பு சென்று ஆட்பதிவுத் திணைக்களத்தில் கேட்ட போது அங்கு அவரது விண்ணப்பம் கிடைக்கவில்லை எனக் கூறப்பட்டது.

இதனையடுத்து விண்ணப்பதாரி தமது பகுதி கிராம அலுவலருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை அடுத்து யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் சமூகக்கல்வி மன்றத்தால் நடத்தப்பட்ட மகளிர் தின விழாவின்போது முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் மகாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.பெரியதமபி மற்றும் கல்லூரி முதல்வர் வ.ஆறுமுகம் கல்லூரி ஆசிரியர்கள் பான்ட் வாத்தியம் சகிதம் விழா மேடைக்கு அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

# வடிசாலைக் கழிவுகளை கொட்டுவதற்கு நடவடிக்கை

வடமராட்சி —

திக்கம் வடிசாலையின் கழிவுப் பொருட்களை கொட்டுவதற்குப் பொருத்தமான இடமில்லாததால் கழிவுகளை அகற்றுவதும் பெரும் பிரச்சினையாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திக்கம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர்ச் சாராயத்தின் கழிவுகளை அகற்றுவதிலே பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பாக வடிசாலை நிர்வாகிகளால் பருத்தித்துறைப் பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து-

அந்தக் கழிவுகளை கடலுக்குள் கொட்டுவதால் எந்த சூழல் பாதிப்பும் ஏற்படாது என்றும் மீன்களுக்கு பயனுள்ளதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டு வடிசாலைக் கழிவுகளை கடலுக்குள் கொட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# இடமாற்றம்

யாழ்ப்பாணம் —

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் சமூக சேவை அலுவலராகக் கடமையாற்றிய ஆ.ஞானவேல் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். இவரது இடத்துக்கு நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய வரதபாஸ்கரன் நியமனம் பெற்றுள்ளார். இந்த இடமாற்றம் கடந்த 3ஆம் திகதி முதல் வழங்கப்பட்டிருந்த போதிலும் தற்போதுதான் இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.(24)


அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்



தோற்றம் 26 04 1938

மறைவு 07 04 2006

அமரர்

கிருஸ்ணபிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 07.05.206 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி அந்தியேட்டி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி, கம்பர்மலை. [C/5317] குடும்பத்தினர்.


## சின்னஞ்சிறு செய்திகள்

### முதியோர் இல்லம் நிறுவப்படவுள்ளது

வடமராட்சி—

வடமராட்சிப் பிரதேசத்தில் முதியோர் இல்லமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொலிகண்டிப் பகுதியில் மேற்படி முதியோர் இல்லமொன்றை அமைப்பதற்கான காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணியில் கட்டடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படுமென பருத்தித்துறைப் பிரதேச செயலர்

### ஆன்மீக சொற்பொழிவு

பருத்தித்துறை —

பருத்தித்துறை - வல்லிபுரஆழ்வார் கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவுகள் வரிசையில் நாளை காலை இராமாயாணம் தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

காலை 10.30 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் சொல்வேந்தன் பொன்.சுகந்தன் ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

### ஒன்று கூடல்

வடமராட்சி —

வடமராட்சிப் பிரதேச உளவளத் துணை நட்புதவியாளர்களுக்கான பயிற்சியும், ஒன்று கூடலும் நாளை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

### பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் —

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த விளையாட்டுப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் எ.அன்ரன் யோகநாயகம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் —

ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் இன்றும், எதிர்வரும் 13 ஆம் திகதியும் நடைபெறவிருந்த ஆசிரியர்களுக்கான கணிப்பீடு மற்றும் செயற்திட்டம் தொடர்பான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


நிறைஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ் ரோஜா நடித்த

எங்கிருந்தோ வந்தான்

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

ராஜா யாழ்ப்பாணம்



புதுவருட வெளியீடு

பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

நேரம் : 10.30,2.30,6.30,9.30

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு

அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த

மூன்றாவது வெற்றி வாரம்

திருப்பதி

இயக்கம் : பேரரசு



காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

# புதிய நிர்வாகத்தில் ஊர்காவற்படை
# 5 ஆயிரம் பேருக்கு ஆயுதப்பயிற்சி!

கொழும்பு —

5 ஆயிரம் ஊர்காவற்படையினரை ஆட்சேர்ப்பு செய்து அவர்களுக்குமுழுமையான ஆயுதப் பயிற்சி வழங்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஊர்காவற்படையினரைப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கும் எல்லைக் கிராமங்களில் நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊர்காவற்படையைத் தனியானதொரு ஆணைக்குழுவின் கீழ் நிர்வகிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸ் திணைக்களத்தின் கீழ் இருந்த ஊர்காவற்படையை நிர்வகிக்கும் இந்த ஆணைக்குழுவுக்குக் கடற்படையின் தலைமை அதிகாரியான றியர் அட்மிரல் சரத் வீரசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை- சிங்கள எல்லையோர கிராமங்களின் பாதுகாப்புக்காகத் தொடர் காவலரண்கள் அமைக்கப்படவுள்ளன.

வாகல்கடவவிலிருந்து ஹொரவப்பொத்தான வரையில் பாதுகாப்புக்காரணங்களுக்காக இந்த முன்னரங்க காவலரண்கள் அமைக்கப்படவுள்ளது.

இராணுவம் மற்றும் பொலிஸாரது அறிவுறுத்தலுக்கமைய இந்த முன்னரங்க காவலரண்கள் அமைக்கப்படவுள்ளதாக விவசாய அபிவிருத்தி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரி வித்தார்.

வாகல் கடவிலிருந்து ஹொரவப்பொத்தான இடையிலான காட்டுப்பகுதியை வடக்கு - கிழக்குக்கு இடையிலான பாதையாக விடுதலைப் புலிகள் பயன்படுத்துவதால், எல்லையோரக் கிராமங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அமைச்சர் சந்திரசேன தெரிவித்தார்.

மேலும் இந்தக்கிராமங்களிலிருந்து புதிய ஊர்காவற்படையினரை தெரிவு செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை வாகல் கட மற்றும் ஹொரவப்பொத்தான பகுதிகளை அமைச்சர் சந்திரசேன சென்று பார்வையிட்டார்.

மேலும் கெப்பிட்டிக்கொல்லாவ எல்லைக்கிராமத்தினரும் தங்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்கக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தங்கள் கிராமங்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்காவிட்டால் கிராமங்களிலிருந்து வெளியேறுவோம் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.

# சயுரவுக்குப் பதிலாக புதிய போர்க்கப்பல்!

கொழும்பு —

ஆழ்கடல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்காக போர்க்கப்பல் ஒன்று நேற்றுமுன்தினம் இலங்கை கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

இந்தியாவால் தற்காலிகமாக இந்தப் போர்க்கப்பல் இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற எளிமையான வைபவத்தின் பின்னர் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இலங்கை கடற்படையினருக்குச் சொந்தமான சயுர என்ற போர்க் கப்பல் இந்தியாவில் மறுசீரமைக்கப்பட்டுவருகிறது.

குறித்த கப்பல் மறுசீரமைக்கப்படும் வரையில் - கடற்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட கப்பல் இலங்கை கடற்படையினரால் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# முகாமைத்துவ உதவியாளர்களாக ஆயிரம் பேருக்கு நியமனம்

கொழும்பு —

முகாமைத்துவ உதவியாளர்களாக ஆயிரம் பேருக்கு எதிர்வரும் 8ஆம் திகதி நியமனம் வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

2002 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட எழுதுவினைஞர் சேவைக்கான ஆட்சேர்ப்புப் பரீட்சையில் தோற்றியோரிலிருந்து இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே 900 பேருக்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இவர்கள் அனைவருக்கும் நியமனம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் முகாமைத்துவ உதவியாளர்களுக்கும் எதிர்வரும் 8 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் நியமனம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

# விடுதலைப் புலிகளின் பயணத்துக்கு கடல் விமானம் வழங்கக்கூடாது

## என்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு —

புலிகளின் பயணத்துக்கு கடல் விமானம் வழங்கக்கூடாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் குணதாஸ அமரசேகர தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகள் வடக்குக்குச் செல்வதற்காக அரசாங்கம் கடல் விமானத்தை வழங்குவதற்கு தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் மட்டுமல்லாது இராணுவத் தளபதிகளும் தாக்குதலுக்குள்ளாகி வருகின்ற நிலையில் - விடுதலைப் புலிகளின் பயணத்துக்கு கடல் விமானம் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வந்தமை அர்த்தமற்றது.

படையினர் புலிகளைத் தோற்கடிப்பதற்காக முயற்சி செய்கின்றபோது அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகள் விசனத்தை ஏற்படுத்துகின்றன.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு அஞ்சி அவர்கள் கேட்பதையெல்லாம் கொடுத்து விடக்கூடாது. மாறாக அவர்களைத் தோற்கடிப்பதற்குப் படையினருக்குச் சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். புலிகளின் இரத்தக் கறையைக் கழுவுவதற்குச் சர்வதேச சவை நிலையைத்துக்கு அவர்களைக் கொண்டு செல்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக் கூடாதென அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் பெண் ஊடகவியலாளரை உடன் விடுதலை செய்யவேண்டும்

## சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்து

கொழும்பு —

கொழும்பில் கைது செய்யப்பட்ட தமிழ்ப்பெண் ஊடகவியலாளர் சிவரம்யா சிவானந்தனை உடனே விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் நிர்வாகி சுனந்த தேசப்பிரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது-

உலக ஊடக சுதந்திர நாள் நிகழ்வின் போது மே 1 ஆம் திகதி தமிழ்ப் பெண் ஊடகவியலாளர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, 2 ஆம் திகதி கறுவாத்தோட்டம் பொலிஸாரால் கொழும்பு நீதிபதி குசல வீரவர்தனவிடம் ஆஜர்படுத்தப்பட்டார்.

அந்தப்பெண் ஊடகவியலாளருக்குப் பயங்கரவாத அமைப்புக்களுடனான தொடர்புகள் உள்ளதா என்பதை அறிவதற்காகத் தேசிய புலனாய்வுத்துறை மற்றும் பயங்கரவாதத் தடுப்புத்துறையினரிடம் அவர் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்தனர்.

அரச ஊடகமான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராகப் பணியாற்றியவர் சிவரம்யா சிவானந்தன். மாநாட்டு மண்டபத்தின் நுழைவு வாயிலில் அவர் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டார். அவரிடம் விழாவுக்கான அழைப்பிதழ் இல்லாத காரணத்தாலேயே பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினது அடையாள அட்டையை அவர் பொலிஸாரிடம் காட்டியபோதும் அதை பொருட்படுத்தாமல் பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைப்பிரிவு இயக்குநர் ஜீவேந்திரகுமாரும் கைது செய்யப்பட்ட சிவரம்யா, தமது நிர்வாகத்தில் தான் பணிபுரிவதாக சுதந்திர ஊடக இயக்கத்தினரிடம் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஏராளமான ஊடகவியலாளர் விழா அழைப்பிதழ்கள் இல்லாத நிலையிலும் நிகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். பொதுவான அழைப்பிதழ்களை நுழைவாயிலில் காட்ட வேண்டும் என்றும் கூறவில்லை.

தமிழினத்தைச் சேர்ந்தவா என்ற ஒரே காரணத்துக்காக சிவரம்யாவிடம் அழைப்பிதழ் கேட்கப்பட்டுள்ளதாக நாம் கருதுகிறோம். அரசாங்கத்தினது இத்தகைய பாரபட்சமான போக்கு வளர்ந்தால் நிலைமைகள் படுமோசமடைந்துவிடும்.

இந்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு விசாரணைகளை நடத்தி அப்பாவி என நிரூபிக்கப்படும் நிலையில் சிவரம்யா சிவானந்தனை உடனே விடுதலை செய்ய வெண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு வரும் அகாஷி கிளிநொச்சி செல்ல அனுமதி

கொழும்பு —

இலங்கைக்கு வருகைதரவுள்ள ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூஷி அகாஷி கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொள்ள அரசாங்கம் அனுமதித்துள்ளதாகத் தெரியவருகிறது.

நோர்வே அனுசரணையாளர்களைத் தவிர இதர வெளிநாட்டவர்களுக்குக் கிளிநொச்சி செல்வதற்கு அறிவிக்கப்படாத தடையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வந்தது.

இந்த நிலையில் இன்று இலங்கை வரும் ஜப்பானியத் தூதுவர் யசூஷி அகாஷி கிளிநொச்சி செல்ல அனுமதிக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் ஜப்பானியத் தூதரகம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

தற்போது இந்தக் கோரிக்கையை அரசாங்கம் 'ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் மே 9 ஆம் திகதி அவர் கிளிநொச்சி செல்வார் என்றும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இருப்பினும் அகாஷியினுடனான சந்திப்புக் குறித்து விடுதலைப் புலிகளின் ஒப்புதலுக்குக் காத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பான கடிதத்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துக்கு ஜப்பானிய தூதரகம் அனுப்பிவைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் யசூசி அகாஷி இலங்கைக்கு வருகை தந்தபோது அவரது கிளிநொச்சிப் பயணத்துக்கு அரசாங்கம் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

# சமாதான முயற்சிகளில் அரசு இரட்டை நிலையில் உள்ளது

## குற்றம் சாட்டுகிறது ஐ.தே.க

கொழும்பு —

அமைதி முயற்சிகளில் அரசாங்கம் இரட்டை நிலையைக் கடைபிடிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியதாவது -

சர்வதேச ஊடகங்களிடம் அமைதி முயற்சியில் அரசாங்கம் ஈடுபாட்டுடன் உள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், உள்நாட்டு ஊடகங்களோ அரசாங்கம் போருக்குத் தயாராக இருப்பதாக கூறுகின்றன.

உதயன் நாளிதழ் அலுவலகம் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம். சம்பூரில் மக்கள் இடம் பெயர்ந்த எண்ணிக்கை குறித்து முரண்பட்ட தகவல்கள் இருந்தாலும் அப்படியான ஒரு சம்பவம் நடந்துள்ளது.

முரண்பாடுடைய அறிக்கைகளை வெளியிட வேண்டாம் என்று எமது நாடாளுமன்ற உறுப்பினர்களை நாம் கோரியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கூறியதாவது -

அரசாங்கத்தால் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியாது போனதால் நாடு மிகவும் சிக்கலான நிலைமையில் உள்ளது.

வடக்கில் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுகின்றனர். தலையில்லாத சடலங்கள் இதர பகுதிகளில் கண்டெடுக்கப்படுகின்றன.

மக்களின் நாளாந்த வாழ்க்கை அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. எல்லையோரக் கிராமங்களில் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் வீடுகளை விட்டு வெளியெறுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

எமது ஆட்சிக்காலத்தில் நாட்டின் எண்ணெய் அகழாய்வுப் பணிக்கு இதர கட்சிகளின் ஒப்புதல் கிடைக்கவில்லை. இந்த நாட்டினது சில்லறை அரசியலுக்கு அது ஒரு உதாரணம்.

அரசியல் யாப்பை மீறி பொலிஸ் ஆணைக்குழுவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்தது ஜனநாயகத்துக்கு விடப்பட்ட அச்சுறுத்தல் எனத் தெரிவித்தார்.

# திருமலை நகர குடியிருப்பில் படையினர் பாரிய தேடுதல்

கொழும்பு —

திருகோணமலையில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் நேற்று முன்தினம் காலை பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

திருமலை தமிழர் பிரதேசங்களில் இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மோப்ப நாய்களைக் கொண்டு தமிழர் வீடுகளைப் படையினர் சோதனையிட்டனர்.

வீடுகளில் கிளைமோர், கண்ணி வெடிகள் மற்றும் வெடிபொருட்கள் உள்ளதா எனக் கடுமையான தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

திருமலை நகருக்குள் மிதிவண்டிகள் மற்றும் மோட்டர் சைக்கிள்கள் உள்நுழைவதைப் பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டிப் படையினர் தடை விதித்துள்ளனர். இந்த வாகனங்களின் தரிப்பிடங்களுக்காகத் தனியான இடங்களையும் ஒதுக்கியுள்ளனர்.

படைகளின் மீது இந்த வாகனங்கள் மூலமாகக் கிளைமோர் கண்ணி வெடித்தாக்குதல் நடத்தப்படுவதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்தமாத இறுதிக்குள் அமைச்சரவையில் மாற்றம்?

கொழும்பு —

அமைச்சரவையில் விரைவில் மாற்றங்களை மேற்கொள்ளுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவெடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த அமைச்சரவை மாற்றங்கள் இந்த மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

முதலீட்டு ஊக்குவிப்பு, விளையாட்டு, ஊடகம், பெருந்தெருக்கள் ஆகிய அமைச்சுக்களில் மாற்றங்கள் ஏற்பட இடமுள்ளதாகவும், அரச வங்கிகள் அபிவிருத்தியமைச்சுப் பதவியிலிருந்து விலகிய விஜயதாச ராஜபக்ஷவுக்கு அமைச்சரவை தகுதியுள்ள அமைச்சுப் பதவி வழங்கப்பட உள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு அமைச்சராக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவரை நியமிப்பது குறித்து ஜனாதிபதி மகிந்த ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

சில அமைச்சர்களின் செயற்பாடுகளால் மகிந்த ராஜபக்ஷ விரக்தியடைந்துள்ளமை - இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன அரசாங்கத்துடன் இணையவுள்ளமை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த அமைச்சரவை மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸோ, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸோ அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதா இல்லையா என்று இதுவரை அரசாங்கத்துக்கு உத்தியோகபூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லையென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இரண்டு கட்சிகளுக்கும் அமைச்சுப்பதவிகளை வழங்குவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

# சுதந்திரமான வாழ்வுக்கு வழிசமைப்பதற்கு தமிழ் மக்கள் அனைவரும் அணிதிரள்வோம்

## கோப்பாய் பிரதேச பொது அமைப்புகள் அறிக்கை

யாழ்ப்பாணம் —

மரணக் குழியருகே நிற்கும் எதிரியை சாகடித்துச் சுதந்திரமான வாழ்வுக்கு வழிசமைக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என கோப்பாய் பிரதேச - பொது அமைப்புக்களின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழர்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து பேரினவாத அரசின் கைக்கூலிகளாக நிலைகொண்டிருக்கும் சிங்கள ஆதிக்க வெறியர்களின் காடைத்தனம் - நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் தேசியத்தின்பால் பற்றுக்கொண்டவர்கள், நிராயுதபாணிகளான போராளிகள், கல்விமான்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் சிங்கள காடையர்களாலும் அதனுடன் எச்சில் எலும்புத் துண்டுக்காக அலையும் தமிழ் தேச விரோத குழுக்களாலும் மிகவும் கொடூரமான முறையில் மனித நேய மற்று படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் நிழல் யுத்தமாகத் தொடங்கி, இப்போது விஸ்வரூபம் பெற்று யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் தலைநகர் கொழும்பிலும் வியாபித்துள்ளது.

கடந்த சிலநாட்களில் மிருகங்களை வெட்டியது போன்று தலைகள் துண்டிக்கப்பட்டு, முண்டங்களாக அவிசாவளையிலும் தமிழர்களின் வாழ்வு சிதைக்கப்பட்டுள்ளது. எங்கு சென்றாலும் தமிழரின் நிலை இவ்வாறுதான் அமையவேண்டும் என்பது சிங்களவரின் தாரகமந்திரம்.

வீரத்தின் வழித்தோன்றலில் பிறப்பெடுத்தவர்களே! தங்களின் தலைநகரின் பாதுகாப்புக்கு ஒப்பந்த விதிமுறைகளுக்கு மாறாக ஒரு தலைப் பட்சமாகப் பாதையை மூடிய சிங்கள ஆட்சியாளர்கள், உங்கள் பாதுகாப்புக்கு பாதைதிறந்து விடுவார்கள் என நப்பாசை கொள்கிறீர்களா? பகைவன் பாதையை மூட நாட் குறித்து விட்டான்.

ஆகாயப் பயணமா? உங்கள் முடிவு. கொழும்பில் நடப்பதுதான் என்ன? சுற்றிவளைப்பும், கைதுகளும், புலனாய்வாளர்களின் சந்தேக பார்வையிலும் தமிழன் என்பதால் கடத்தல்களும், வீதிகளில் உயிரற்ற சடலங்களும் புரியவில்லையா? தடைஉடைத்து பயணம் தொடர வரிப்புலிகள் சேனை சபதமெடுத்துள்ளது.

தாக்குப் பிடிக்க முடியாமல் ஓட்டமெடுக்க சிங்கள சிப்பாய்கள் தயார். ஓட ஓட விரட்டும் படையுடன் நீங்களும் இணைந்தால், 40 ஆயிரம் சிப்பாய்களின் உடலைப் பெட்டியில் அனுப்பலாம். அவர்கள் ஊர்களுக்குப் பொங்கு தமிழாய், கண்டனக் கூட்டங்களாய், பேரணிகளாய், மகஜர்களாய், கதவடைப்புக்களை நடத்தி எமது உரிமையை உணர்த்தி அதனை தாருங்கள் என்று இலங்கை அரசிடமும், சர்வதேசத்திடமும் கேட்டு நின்றோம்.

மாறாகக் கொடூர கொலைகளும், கைதுகளும் மலிந்துவிட்டன. எம் ஊரில் காடையர் கும்பலுக்கு நாம் சொல்லும் மொழிகள் புரியவில்லை. புரியும் மொழியில் சொல்ல முனைந்தால் ஓட்டம்பிடிப்பான். விரைந்து வாருங்கள் 7 லட்சம் மக்கள் மத்தியில் ஆக்கிரமிப்பாளர் வெறும் தூசா[illegible]வனிடம்தான் துப்பாக்கியுண்டு. அதே துப்பாக்கி எம்மிடம் இருந்தால் எம்முன் வருவானா எதிரி? பெருந்தொகை ஆயுதங்கள் குவிந்து கிடக்கிறது.

ஏந்துவோம் வாருங்கள். சத்தமில்லாமல், யுத்தமில்லாமல் எமது பிரதேசங்களில் நாங்கள் சுதந்திரமாய் உலாவரலாம். துணிந்து வாருங்கள். மரணக் குழியருகே நிற்பவர்களைச் சாகடிப்போம். இல்லை யேல் அவன் உங்களை சாகடிப்பான். காலம் தாழ்த்தாது விரைந்து வந்து இணையும் கரங்களுடன் ஒன்றிணைய வாருங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருகோணமலையில் இராணுவத்தினர் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# அராஜக அரசுகள் பட்டியல்; இலங்கைக்கு 25 ஆவது இடம்

கொழும்பு —

இலங்கை தனது வரலாற்றில் முதற்தடவையாக அராஜக அரசின் நிலைக்குட்பட்டதாக மாறியுள்ளது.

இதன்படி 2006 ஆம் ஆண்டுக்கென வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் இலங்கை 25 ஆவது இடத்திலுள்ளது. சூடான் முதலாவது இடத்திலுள்ளது. இலங்கை எத்தியோப்பியாவைவிட மிகவும் மோசமான இடத்திலுள்ளது.

தகுதியில்லாத அரசாங்கம் என்ற எண்ணக்கருவின்படி, அந்த அரசாங்கம் அராஜக நிலையில் இருப்பதாகக் கருதப்படுகின்றது.

இந்த அறிக்கையை அமெரிக்காவின் வொஷிங்டனிலுள்ள வெளிநாட்டு கொள்கைச்சபை மற்றும் உளவு நிறுவனமுமே வெளியிடுகின்றன.


இந்த அறிக்கைக்கு அமைய தகுதியற்ற அரசு என்ற நிலையிலுள்ளவை 28 நாடுகளாகும். அதில் 25 ஆவது இடத்தைப் பெற்றுள்ள இலங்கை, பெற்றுள்ள புள்ளிகள் 92.4 ஆகும். முதலாவது இடத்திலுள்ள சூடான் 112.3 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இந்த அறிக்கைக்கு அமைய உள்நாட்டு இடப்பெயர்வு, மற்றும் அகதிகள், பழிவாங்கல், சட்ட செயற்பாடுகள் இல்லாமை, பாரிய பொருளாதார நலிவு, அரசின் அநீதியான செயற்பாடு, அரச சேவைகளின் நலிவு, மிகப்பாரியளவில் நிகழும் மனித உரிமை மீறல்கள், வெளிச் சக்திகளின் தலையீடு என 12 விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த அறிக்கைக்கு வரும் தகவலுக்கமைய பழிவாங்குதல் குறித்த விடயத்தில் உலகின் அனைத்து நாடுகளிடையேயும் முதலாவது இடத்தில் இலங்கையுள்ளது. (தே)

# ஜனாதிபதி வாசஸ்தலத்துக்கு குடிபெயர்கிறார் மகிந்த!

கொழும்பு —



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்லவுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த நவம்பர் மாதம் 18 ஆம் திகதி ஜனாதிபதி பதியை ஏற்ற மகிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையிலேயே தங்கியுள்ளார். எனினும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலமையை அடுத்து அலரிமாளிகை - ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு உகந்ததல்ல எனப் பாதுகாப்புத் தரப்பினர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியருந்தனர்.

இதனையடுத்து தமிழ் - சிங்கள புதுவருடத்துக்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்ல ஜனாதிபதி திட்டமிட்டபோதிலும் அது தாமதமானது. இந்த நிலையிலேயே நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்துக்கு அவர் செல்லவுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு மகிந்த ராஜபக்ஷ சென்றதும், அலரிமாளிகைக்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க செல்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## பாதுகாப்பு அச்சுறுத்தலை கண்டறிய

# முன்னாள் படை அதிகாரிகள் அடங்கிய புலனாய்வுச் சபை அரசால் அமைப்பு

கொழும்பு —

தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைக் கண்டறிந்து, அவற்றை மதிப்பீடு செய்து, எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பரிந்துரை செய்வதற்கு ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் அடங்கிய புலனாய்வுச் சபையொன்றை அரசு நியமித்துள்ளது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் மேஜர் ஜெனரல் எம். டி.பெர்னாண்டோ, முன்னாள் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி, முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் மொகான் சமரசேகர, மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா, மேஜர் ஜெனரல் சீவலி வணிகசேகர, மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராச்சி, கேணல் விபுல் பொத்தேகியு, கேணல் கமல் பெர்னாண்டோ ஆகியோர் இந்தச் சபையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் கூடும் இந்தக் குழுவின் செயலாளராக கேணல் விகும் சிறிவர்த்தன தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைப் பகுப்பாய்வு செய்து, அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பரிந் துரை செய்வதும், பாதுகாப்பு நடைமுறைகளைத் திட்டமிடுவதும் இந்த புலனாவுச் சபையின் செயற்பாடாகும். (தே)

# இந்திய நகரங்களுக்கான விமான கட்டணங்கள் உயர்வு

கொழும்பு —

சிறிலங்கா எயார் லைன்ஸ் விமான சேவை நிறுவனம் இந்தியா செல்வதற்கான அனைத்து விமான கட்டணங்களும் 10 டொலர்களால் உயர்த்தப்பட்டுள்ளது. நேற்றுமுதல் இந்தக் கட்டண உயர்வு அமுலுக்கு வந்தது.

இந்தியாவுக்கு அதிக விமானங்களை இயக்கும் விமான போக்குவரத்து சேவை நிறுவனம் இதுவாகும். சென்னை, திருச்சி, கொச்சி, திருவானந்தபுரம், பெங்களூர், ஹைதராபாத், கொல்கத்தா, டெல்கி, மும்பை ஆகிய நகரங்களுக்கு விமான சேவையை இந்த நிறுவனம் மேற் கொள்கிறது.

அதேபோன்று, ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் கட்டணம் 30 டொலர்களாலும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு 20 டொலர்களாலும் உயர்த்தப்பட்டுள்ளது.

# இராணுவ வழி தீர்வுக்கும் ஐ.தே.கட்சி ஆதரவாம்

கொழும்பு —

இனப்பிரச்சினைக்கு இராணுவ வழித் தீர்வுகாண அரசாங்கம் முனைந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில் -

இனப்பிரச்சினைக்கு அமைதி முயற்சிகள் மூலமே தீர்வு காணப்படவேண்டும். ஆனால், போரின் மூலம் அரசாங்கம் தீர்வு காண முயற்சித்தால் நாங்கள் அரசாங்கத்தை ஆதரிப்போம்.

நோர்வே அனுசரணையாளரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சரியாகக் கையாளவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# பாரியளவிலான யுத்தம் ஏற்பட்டால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கும்

## ஆய்வாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கையில் அதிகரித்துவரும் வன்செயல்கள் முழுஅளவிலான யுத்தத்துக்குச் சென்றால், அது நாட்டின் பணவீக்கத்தை அதிகரிக்கச் செய்வதுடன் பொருளாதார வளர்ச்சி வேகத்தையும் மிகமோசமாகப் பாதிக்குமென ஆய்வாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதுவும் தலைநகர் கொழும்பில் ஏதாவது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால் பொருளாதார வளர்ச்சியில் வேதனையான செயற்பாடுகள் இடம்பெறுவதுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிடுவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

முழு அளவிலான யுத்தம் வெடிக்குமானால், வெளிநாட்டு முதலீடுகள் பாதிக்கப்படுவதுடன், பாதுகாப்புச் செலவீனங்களும், உயர்நிலைக்குச் செல்லுமென ஹற்றன் நஷினல் வங்கியைச் சேர் ந்த பொருளாதார நிபுணரான கசித பிரேமரட்ண தெரிவித்தார்.

தற்போது வெளிநாட்டு நாணயங்களைத் தருவிக்க அரசாங்கம் முயன்றாலும் அது சாத்தியமற்றதென வஜிர பிரேமவர்த்தன தெரிவித்தார்.

கடந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து 9.6 வீதமாக இருந்த பணவீக்கம் 9.2 வீதமாக குறைந்திருந்தது. ஆனால், தற்போது எரிபொருட்களின் விலை அதிகரிப்பால் மீளவும் பண வீக்க வீதம் உயரவுள்ளது. எரிபொரு ட்களின் விலை அதிகரிப்பை அடுத்து அரசு வழங்கி வந்த மானிய கொடுப் பனவை நிறுத்தியுள்ளது.

இந்த மானியக் கொடுப்பனவை, வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தலாமென்பதற்காகவே அரசு மானியத்தை நிறுத்தியுள்ளது. எனினும் இதனால், நுகர் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இதனால் பணவீக்கம் அதிகரிக்கும். ஆயினும், எரிபொருளுக்கான மானியக்கொடுப்பனவை நிறுத்தாது அது வரவு செலவுத் திட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமென்றார் கசித பிரேமரட்ண.

தற்போதுள்ள முழுக்கவலையும் முழுஅளவிலான போரில் பாதுகாப்புச் செலவீனம்அதிகரிப்பதே. அத்துடன், கொழும்பில் பொருளாதார இலக்கு அல்லது பொதுமக்களின் இடமொன்று தாக்கப்படுமாக இருந்தால் வெளிநாட்டு முதலீடுகள் முற்றிலுமாகத் தடைப்படும்.

இந்த வருடம் பொருளதார வளர்ச்சி 6.9 வீதமாக இருக்குமென மத்திய வங்கி தெரிவித்திருந்தது. ஆனால், தற்போதைய நிலை காணப்படுமாக இருந்தால், அது சாத்தியப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

# வலய கல்வி அலுவலகங்களுக்கு கட்டடங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு

திருகோணமலை —

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் ஏழு வலயக் கல்வி அலுவலகங்களுக்குப் புதிதாகக் கட்டட வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு மாகாண கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ். தீவகம், வவுனியா, மடு, கிளிநொச்சி, கல்குடா, மூதூர் மற்றும் தெஹியத்தகண்டிய ஆசிய வலயக் கல்வி அலுவலகங்களுக்கு இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகப் பாடசாலை வேலைகள் பணிப்பாளர் எஸ்.கே.விநாயகரத்தினம் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் 24 கல்வி வலயங்களிலுமுள்ள பாடசாலைகளின் வகுப்பறைப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்த வகுப்பறைத் திட்டத்தில் - கட்டடம் அமைத்தல், வகுப்பறை திருத்தல், கனிணி அறை அமைத்தல், நூலக வசதி, மனையியல் அறை, செயற்பாட்டறை போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நிதி ஒடுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வலயக்கல்வி அலுவலகங்களிலிருந்து உரிய மதிப்பீட்டறிக்கைகள் கிடைக்கப்பெற்றதும் நிர்மாணப் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வீதிகளை அமைப்பதற்கு அனுமதி பெறப்படவேண்டும்

வடமராட்சி

பருத்தித்துறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுனாமி வீடமைப்புத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் இடங்களில் புதிதாக வீதிகளை அமைப்பதாயின் பிரதேச சபையின் அனுமதி பெறப்படவேண்டுமென பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி வீடமைப்புத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் இடங்களில் புதிதாக வீதிகளை அமைக்கின்ற போது - பிரதேச சபையின் அனுமதி பெறப்பட வேண்டுமெனவும், அவ்வாறு அனுமதியுடன் அமைக்கப்படும் வீதிகளையே தம்மால் புனரமைக்கவோ, பராமரிக்கவோ முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொலைகளை நிறுத்துங்கள்

## யாழ். ஆயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்

கொலைகளை நிறுத்துமாறு யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

யாழ்.நகரில் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நடைபெற்றுவரும் கொலைகளின் உச்சமாக உதயன் பத்திரிகை காரியாலயத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.


தொடரும் இந்தக் கொலைகளால் மக்கள் அதிர்ச்சியிலும், அச்சத்திலும் உறைந்துபோயுள்ளனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்த யாருமே பொறுப்பெடுக்காத நிலையில் கொலைகள் தொடர்வது மிகுந்த வேதனை தருகிறது. கொலை பிரச்சினையின் தீர்வு அல்ல.

பதிலுக்குப் பதில் கொலை செய்வதால் எதனையும் சாதிக்கமுடியாது. அநியாயமாக அன்றாடம் மக்கள் கொல்லப்படுவது எம்மையே நாம் அழிப்பதாகும். போர் நடக்கும் காலத்திலிருந்த பயத்தையும், பீதியையும்விட அதிக பயத்திலும், பீதியிலும் மக்கள் இன்று இருக்கிறார்கள்.

சமாதான காலத்தில் இதுபோன்ற கொலைகளை நாம் அனுமதிக்க முடியாது.

இந்தத் தாக்குதல்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு எதிரானவை. இராணுவக் கெடுபிடிகள் ஒருபுறம். பயங்கரக் கொலைகள் மறுபுறம் எனத் தொடரும் இந்த வன்செயல்களை உடன் நிறுத்துங்கள்.



பேச்சுவார்த்தைக்கு உடன் விரையுங்கள் என சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தமிழ் மக்கள் பெயரால் வேண்டுகோள் விடுக்கிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஏழு



பெயர் : ம.விதுஷன்
முகவரி : வதிரி.

அகவை ஏழு




பெயர் : அ.அனோஜா
முகவரி : யாழ்ப்பாணம்.





# இருபது வருடங்களின் பின்னர் சுப்பிரமணியம் பூங்கா திறப்பு



யாழ்ப்பாணம்

புனர்வாழ்வு அமைச்சு, யுனிசெவ் நிறுவனம் மற்றும் யாழ்.மாநகரசபை நிதிமூலம் புனரமைப்புச் செய்யப்பட்ட சுப்பிரமணியம் பூங்காவை கடந்த புதன்கிழமை மாலை 4.45 மணியளவில் அரசாங்க அதிபர் கே.கணேஷ் திறந்து வைத்தார்.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

மங்கள விளக்கை யாழ். மாவட்ட பேராயர் தோமஸ் சௌந்தரநாயகம், முன்னாள் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

கடந்த சுமார் இருபது வருடங்களுக்கு மேலாகக் குறிப்பிட்ட பூங்காவின் பயன்பாடு இல்லாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தாக்குதலைத் தொடர்ந்து குறிப்பிட்ட பூங்காவை பொது மக்கள் பயன்படுத்துவது தடுக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குருநகர் தண்ணீர் தாங்கியடியில் மகப்பேற்று நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம்

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் அனுசரணையுடன் குருநகர் தண்ணீர் தாங்கியடியில் மக்கள் நன்மை கருதி மீள் நிர்மாணம் செய்யப்பட்ட யூபிலி மகப்பேற்று நிலையத்தை கடந்த புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கே.கணேஷ் திறந்து வைத்தார்.

யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் -

அரசாங்க அதிபர் . மங்கள விளக்கை ஏற்ற, அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பற்றிக் டிரஞ்சன் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்த க.மகாலிங் கம் உட்பட மற்றும் பலர் ஏற்றினர்.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்றகூட்டத்தில் மாநகரசபை ஆணையாளர் உரையாற்றும்போது - யாழ்ப்பாணம் மாநகரசபை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட மகப்பேற்று நிலையம் இதுவாகும். இது கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுக் காணப்பட்டது.

தற்போது இது சிறுவர் பாது காப்பு நிதியத்தின் உதவியுடன் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர், யாழ்.மாநகர சபை வைத்திய அதிகாரி க.மரியதாஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

## இணையத்தளம் ஆரம்பிப்பு

வடமராட்சி

தொண்டமனாறு, செல்வச்சந்நிதி கோவிலின் பெருமைகளை விளக்கவென இணையத்தளம் ஒன்றை சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை ஆரம்பித்துள்ளது.

W.W.W.sannithiyan.org எனும் இணையத்தளத்தில் சந்நிதியான் பெருமைகளை பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சைக்கிள் நிறுத்துவதற்கு படையினர் தடை விதிப்பு

சங்கானை

சங்கானை - காரைநகர் பிரதான வீதியில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் நிறுத்துவதற்குப் படையினர் தடை விதித்துள்ளனர்.

இதனால் பிரதான வீதிகளிலுள்ள கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது வாகனங்களை எங்கே நிறுத்தி வைப்பது என அறிய முடியாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

இதனிடையே பஸ் நிலையத்துக்கு முன்னால் செல்லும் பிரதான வீதியில் படையினர் வீதித்தடையை அமைத்துள்ளனர். இந்தப் பாதையால் செல்லும் வாகனங்கள் அனைத்தும் படையினரால் கடும் சோதனைக்குட்படுத்தப்படுகிறது.

இந்தப் பாதையால் பயணம் செய்வோர் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியவர்களாகவும், உரியநேரத்தில் தமது கடமைகளைச் செய்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் விசனம் தெரிவித்தனர். (48)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

சண்டிலிப்பாய்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் தேசிய இலக்கிய கலைப்பெருவிழாவை முன்னிட்டு நடத்திய போட்டி முடிவுகளின் விபரங்கள் வருமாறு-

கட்டுரை (கனிஷ்ட பிரிவு)

1 ஆம் இடம் -யோ.அன்பரசி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் - எ.டினேஸ் (மானிப்பாய் இந்துக்கல்லூரி), 3 ஆம் இடம் - ஸ்ரீ.சுபாங்கன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

கட்டுரை (சிரேஷ்ட பிரிவு)

1 ஆம் இடம் -இ.மீரா (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), 2 ஆம் இடம் - ச.தாரணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் - ப.சொரூபா (பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி).

கவிதை (கனிஷ்ட பிரிவு)

1 ஆம் இடம் - அ.சிந்துஜா (இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் - அ.சுபாசினி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் -வ.நிஷாயினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கி லப் பாடசாலை).

கவிதை (விமர்சனம்) சிரேஷ்ட பிரிவு

1 ஆம் இடம் - த.மேனகா (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை), 2 ஆம் இடம் -ம.சங்கீதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் -இ.மீரா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) .

சிறுகதை விமர்சனம் (சிரேஷ்ட பிரிவு)

1 ஆம் இடம் - த. மேனகா (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை), 2 ஆம் இடம் - த.பிரியலதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ,3 ஆம் இடம் - போ.தனேஸ் (மானிப்பாய் இந்துக்கல்லூரி).

சிறுகதை (மட்டுப்படுத்தப்பட்டது)

1ஆம் இடம் - சி.கீர்த்திகா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - கு.கேமலா (இளவாலை கன்னி யர் மடம் மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம் - பி.நிரோஜா (இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்).

# யாழ். நகரில் மாலைவேளைகளில் படையினரின் தீவிர சோதனை

யாழ்ப்பாணம்

மாலை வேளைகளில் யாழ். நகர பகுதிகளிலும், நகரை அண்டிய பகுதிகளிலும் படையினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மாலை வேளைகளில் யாழ். நகரில் மையப்பகுதிகளான பஸ் நிலையப் பகுதி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, முனீஸ்வரன் வீதி ஆகிய இடங்களில் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டு, சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் மாலை வேளைகளில் யாழ். நகரப் பகுதியிலிருந்து வெளியிடங்களுக்குப் புறப்படும் பஸ்கள் யாழ். நகரப் பகுதிக்குள்ளேயே பல இடங்களில் நிறுத்தப்பட்டு பயணிகள் இறக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றனர். இதனால் பயணிகள் உரிய நேரத்துக்கு தமது இடங்களுக்குச் செல்ல முடியாதுள்ளது.

இதேவேளை, வலி.தென்மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் படையினரது மோட்டார் சைக்கிள் ரோந்து நடவடிக்கைகளும் தீவிரமாகியுள்ளது. நேற்று முன்தினம் படையினர் மீது சித்தன்கேணியில் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து நேற்று முன்தினம் சங்கானை, சித்தன்கேணி, சில்லாலை, மாதகல், பண்டத்தரிப்புப் பகுதிகளில் பீல்ட் பைக் படையினர் வீதி யால் சென்றவர்களை மதில் மேல் கைகளை உயர்த்துமாறு கூறிச் சோதனை மேற்கொண்டனர்.

மேலும் இந்தப் பகுதிகளில் வழமைக்கு மாறாகப் படையினர் வீதித் தடைகளையும் அமைத்து வருகின்றனர். வீதிகளில் தகரங்கள், கற்கள் போன்றவற்றைக் கொண்டு தடைகளை அமைத்தும் வருகின்றனர்.

இதனால் வாகனப் போக்குவரத்துக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

# தும்புத் தொழிற்சாலை அமைக்க காணி வழங்குமாறு கோரிக்கை

வடமராட்சி

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் தும்புத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு காணியை வழங்குமாறு பனை அபிவிருத்திச் சபை கோரிக்கை விடுத்துள்ளது. வல்லிபுரம் பகுதியில் தும்புத் தொழிற்சாலை ஒன்றை அமைப் பதற்கு பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளபோதிலும், காணி இல்லாமையால் தொழிற்சாலை அமைக்கும் பணிகள் தாமதமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்தே பனை அபிவிருத்திச் சபையின் பிரதிநிதிகள் பருத்தித்துறைப் பிரதேச செயலரிடம் காணி ஒன்றை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வாகனங்களின் இரைச்சலால் நோயாளர்கள் பெரும் அவதி

வடமராட்சி

மந்திகை ஆதாரவைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வீதியூடாக மணல் ஏற்றும் வாகனங்கள் இரைச்சல் சத்தத்துடன் அடிக்கடி போக்குவரத்துச் செய்வதால் நோயாளர்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டு கட்டடத் தேவைக்கான மணல் மண் வடமராட்சி கிழக்கு மணற்காட்டிலிருந்தே பெறப்படுகிறது.

எனவே, மணற்காட்டிலிருந்து லொறிகள், உழவு இயந்திரங்கள் என ஏராளமான வாகனங்கள் மண்ணை ஏற்றியபடி மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபடுகின்றன.

இதனால் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும், எனவே மணல் ஏற்றும் வாகனங்கள் செல்வதற்கு மாற்றுப் பாதையை பாவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வவுனியாவில் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன



வவுனியா

வவுனியா செட்டிகுளம் வீதியில் 8 ஆவது மைல்கல் பாவற்குளத்துக்கு அருகில் புதன்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்ட மூவரது சடலங்களும் அடையாளம் காணப்பட்டன.

புதன்கிழமை பிற்பகல் ஒருவரது சடலம் அவரது உறவினரால் அடையாளம் காணப்பட்ட நிலையில் - மற்றைய இருவரது சடலங்கள் நேற்று முன்தினம் இரவு அடையாளம் காணப்பட்டன.

பம்பைமடுவைச் சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதி ஆர்.நாகேஸ்,பெரிய கோமரசன்குளத்தைச் சேர்ந்த எஸ்.ஜெபநேசன், மடு பாலமைபட்டியைச் சேர்ந்த என்.சிவலிங்கம் ஆகியோரே உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் குற்றவியல் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட நீதிவானின் பணிப்புரையின் பேரில் இந்த மூவரது சடலங்களும் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பிரேதப் பரிசோதனைகளை நடத்திய பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு நீதிவான் இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

# சமகால அரசியல் கலந்துரையாடல்

வட்டக்கச்சி

சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாடல்கள் வன்னியில் பரவலாக இடம் பெற்று வருகின்றன. அந்த வகையில் கடந்த புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் கரைச்சிப் பிரதேசசபை அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் தலைமையில் இடம் பெற்ற இந்த சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாடலில் புலிகளின் குரல் பொறுப் பாளர் தமிழன்பன் தெரிவிக்கையில் -

சிங்களப் படைகளும் துணை ஆயுதக் குழுக்களும் இணைந்து தமிழ் மக்களை கொன்று குவித்து வருகின்றனர். ஆகவே, இவர்களை எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்க வீட்டுக்கொருவர் போராளியாக வர வேண்டும். அல்லது துணைப்படையாகவோ அல்லது பகுதி நேரப் போராளியாகவோ வந்து இணைந்து எமது மண்ணை விரைவில் மீட்டு நிம்மதியாக வாழ நீங்கள் முன்வர வேண்டுமென கேட்டுக்கொண்டார். (09)

# விழி இதழ் வெளிவந்தது

கிளிநொச்சி

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் மாதாந்தம் வெளியிடப்படும் மருத்துவ இதழான விழி வெளிவந்துள்ளது.

இதில் ஆசிரியர் குறிப்புடன், மனிதக் கண்ணின் அமைப்பும் தொழிற்பாடும், பாம்புக்கடி, கண்நீர் அழுத்த நோய், உடற்பயிற்சி செய்து உடல் எடையைக் குறையுங்கள், அஜீன மோட்டோ சேர்த்த உணவுகளால் நரம்பு மண்டலம் பாதிப்பு, ஆரோக்கியத்தைக் கெடுப்பது அசுத்தமான குடிநீரே என்பனவற்றைக் கொண்டு வெளிவந்துள்ளது. (இ)

# இளைய ஓவியர் வட்டம் புதிய அமைப்பு உருவாக்கம்

கிளிநெச்சி

தமிழீழ நுண்கலைப்பிரிவின் ஏற்பாட்டில் கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியில் ஓவியர்களுக்கான சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. இதில் தமிழீழ மண்ணில் ஓவியத்துறையினது செயற்பாடுகளை துரிதப்படுத்தவும், கற்கையை மேம்படுத்தவும் வேண்டிய தேவை வலியுறுத்தப்பட்டது.

இதற்கமைய ஓவியச் செயற்பாடுகளை முன்னெடுக்கவென இளைய ஓவியர் வட்டம் என்ற பெயரில் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது.

நுண்கலைக் கல்லூரிகளுக்கூடாக ஓவிய வகுப்புக்களை மேம்படுத்தல், கண்காட்சிகளை ஒழுங்குபடுத்தல், கட்அவுட் மற்றும் சுவரொட்டிகளை வடிவமைத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தல், அத்துடன் ஓவியம்சார் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் தொடர்பு நிலையமாகச் செயற்படுத்தல் போன்ற நோக்கங்களுடன் இந்த அமைப்பு செயற்படவுள்ளது.

இளைய ஓவியர் வட்டம் கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரி வளாகத்தில் தொடர்ந்து இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுனாமி மீள் குடியேற்ற வீடுகள் கல்லாறு கிராமத்தில் திறப்பு

வட்டக்கச்சி

கல்லாறு கிராமத்தில் அமைக்கப்பட்ட சுனாமி மீள் குடியேற்ற கிராம வீடுகள் கையளிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.45 மணியளவில் கண்டாவளைப் பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் த.வேதநாயகம், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் உரைகளை நிகழ்த்தினர்.

ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட 143 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் 43 வீடுகள் யூ.என்.கப்பிற்றர் நிறுவனத்தாலும் ஏனைய 100 வீடுகள் ஜனாதிபதி நிதியம் மற்றும் சேவா லங்கா நிதியுதவியுடனும் அமைக்கப்பட்டுள்ளன.

43 வீட்டுத் தொகுதிகளின் பெயர்ப் பலகையை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் திரை நீக்கம் செய்ததுடன், முதலாவது வீட்டை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

அடுத்து 100 வீட்டுத் திட்டத்தின் பெயர்ப்பலகையை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திரைநீக்கம் செய்து வைத்து முதலாவது வீட்டின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து ஏனைய வீடுகளை அரச அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள், அரச அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள் திறந்து வைத்தனர்.

# பற்சிகிச்சையும் விழிப்புணர்வு கருத்தூட்டலும்

கிளிநொச்சி

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் பற்சுகாதாரப் பிரிவால் கடந்த 2ஆம் திகதி மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் பற்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதில், பற்சுகாதார குறைபாடுள்ள 90பேருக்கு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதேதினம் துணுக்காய் அ.த.க பாடசாலையிலும் பற்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதுடன், பற்சிகிச்சை சுகாதார விழிப்புணர்வு கருத்தூட்டல்களும் வழங்கப்பட்டன.

இதில் பாடசாலை ஆசிரியர், மாணவர்கள் என 150இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலத்திலும் பற்சிகிச்சை நடைபெற்றது.

# சுயதொழில் முயற்சிக்கு கடனுதவி வழங்கல்

வட்டக்ககச்சி

வட்டக்கச்சி 10 வீட்டுத்திட்டம், தொண்டமான் நகர் ஆகியவற்றில் வசிக்கும் உழைப்பாளரை இழந்த வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு சுய தொழில் முயற்சிக் கடனுதவிகள் வழங்கப்பட்டன.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதி உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தால் இந்தக் கடனுதவிகள் வழங்கப்பட்டன.

கால் நடை வளர்ப்பு, தையல், வியாபாரம், சிறுகைத்தொழில், விவசாயம் போன்ற சுயதொழில்களுக்காக மொத்தம் இரண்டு லட்சத்து 40 ஆயிரம் ரூபா கடனுதவியாக வழங்கப்பட்டது.

தொண்டமான் நகரில் 18 பயனாளிகளுக்கும், வட்டக்கச்சி 10 வீட்டுத் திட்டத்தில் 10 பயனாளிகளுக்கும் இந்தக் கடனுதவி வழங்கப்பட்டது. (இ)

# க.பொ.த. பரீட்சை பெறுபேறுகள்

கிளிநொச்சி

அண்மையில் வெளியான க. பொ.த சாதாரண தர பரீட்சையில் கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையில் உயர் பெறு பேறுகளைப் பெற்ற மாணவர்க ளின் விபரம் பின்வருமாறு -

தங்கராசா தர்சிகா - 7ஏ பி 2சி, பத்மநாதன் வாசுகி - 5ஏ பி 3சி, பாலசிங்கம் லாவண்யன் - 4ஏ 2பி 3சி எஸ், பாலசிங்கம் தர்சயன் - 4ஏ 3சி 3எஸ், கிருஸ்ணராசா கிருஸ்ணகுமாரி - 3ஏ 1பி 4சி எஸ், மனோகரன் சுபைதா - 2ஏ 2பி 5சி எஸ், வேலாயுதம் கேசரஞ்சினி - 2ஏ 3பி 4எஸ், வைரமுத்து கஸ்தூரி - 2ஏ பி 2சி 2எஸ், கந்தசாமி சாரதா - 2ஏ 2பி 4எஸ். (09)

# முன்பள்ளி கட்டடம் திறந்து வைப்பு



முல்லைத்தீவு

முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட எட்வின் முன்பள்ளிக் கட்டடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையில், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய ஏற்பாட்டின்கீழ் சிறார்களின் நலனைக் கருத்திற்கொண்டு இது அமைக்கப் பட்டது.

முன்பள்ளியின் பெயர் பலகையை பார்த்தீபன் திரைநீக்கம் செய்து வைக்க, கட்டடத்தை சண்முகலிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

# கடற்கரும்புலி ஜெயந்தனின் 15ஆம் ஆண்டு நினைவு தினம்

வட்டக்கச்சி

கடற் கரும்புலி கப்டன் ஜெயந்தனின் 15 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வும், ஜெயந்தன் படையணியின் 13 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் மூங்கிலாறு உடையார்கட்டில் அமைந்துள்ள மட்டு. அம்பாறை மாவீரர் நினைவு மண்டபத்தில் மிகவும் எழுச்சியுடன் நடைபெற்றது.

மட்டு. அம்பாறை தொடர்பகப் பொறுப்பாளர் இராசு தலைமையில் காலை 10 மணிக்கு இந்த நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் பொதுச்சுடரை ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை ஜெயந்தன் படையணி நிர்வாகப் பொறுப்பாளர் நளன் ஏற்றி வைத்தார்.

கடற்கரும்புலி கப்டன் ஜெயந்தனின் திருவுருவப்படத்துக்கு தமிழீழ மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து முதல் கரும்புலி கப்டன் மில்லர், முதல் பெண் கடற் கரும்புலி கப்டன் அங்கயற் கண்ணி, கடற்கரும்புலி லெப். கேணல் றெஜி, கடற் கரும்புலி கப்டன் சாதுரியன் ஆகிய மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு சுடரேற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அகவணக்கமும், மலர் வணக்கமும் இடம் பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், தமிழீழ மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

ஜெயந்தன் படையணி நிர்வாக செயலகப் பொறுப்பாளர் வர்மன் சிறப்புரை நிகழ்த்தினார்.

# வாகன சாரதிப் பயிற்சிக்கு பதிவு செய்யக் கோரிக்கை

முல்லைத்தீவு

முல்லைத்தீவு முறைசாராக் கல்விப் பிரிவு நடைமுறைப்படுத்தும் வாகன சாரதிப் பயிற்சி நெறி எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே, இதில் கலந்து கொள்ளவிரும்பும் 18 வயதுக்கு மேற்பட்டோர் அடையாள அட்டையுடன் வந்து முறைசாராக் கல்வி பிரிவினரிடம் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பு பதிவு செய்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (09)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க
சொல்லின் பயன்இலாச் சொல்
- திருக்குறள்

## நமது நோக்கு

# படுகொலைகள் நிறுத்தப்படுமா?

குடாநாட்டில் இடம்பெறும் படுகொலைகளை கண்டித்தும் - உதயன் பத்திரிகை அலுவலகத்தின் மீதான தாக்குதலைக் கண்டித்தும் நேற்று முன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்தக் ஹர்த்தால் குறித்த தகவல்கள் அன்றைய காலை தினசரிகள் மூலமே மக்களுக்குத் தெரிந்த போதும் - குடாநாட்டு மக்கள் முழுமையாகவே தமது வழக்கமான செயற்பாடுகளை நிறுத்தி பூரண ஒத்துழைப்புக் கொடுத்திருந்தனர்.

அதாவது - இந்தப் படுகொலைகளுக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதத்திலேயே குடாநாட்டு மக்கள் தமது வழக்கமான செயற்பாடுகளைப் புறக்கணித்து வீடுகளுக்குள் முடங்கிக்கிடந்தனர்.

ஆனால், இந்த ஹர்த்தால் அனுஷ்டிப்பு படைத்தரப்புக்கு ஏன் அச்சத்தைக் கொடுத்தது?

ஹர்த்தாலை முன்னிட்டு பூட்டப்பட்டிருந்த வர்த்தக நிலையங்களைத் திறக்கும்படி படையினர் வலியுறுத்தியதுடன் பலரை அடித்துத் துன்புறுத்தியும் - போக்குவரத்தில் ஈடுபட்டிருந்தவர்களைத் தாக்கியதன் அர்த்தமும் என்ன வென்று சொல்வது?

படுகொலைகளைக் கண்டித்து நடத்தப்பட்ட ஹர்த்தாலை படைத்தரப்பு விரும்பாதது ஏன்? அப்படியானால், படுகொலைச் சூத்திரதாரிகளுக்கு தாம் ஆதரவென்று அவர்கள் இதன் மூலம் பகிரங்கப்படுத்துகிறார்களா? உண்மையில் மக்கள் அப்படித்தான் கருதுகிறார்கள்.

குடாநாட்டில் படுகொலைகளைக் கண்டித்து நடத்தப்பட்ட ஹர்த்தாலை சீர்குலைக்க படைத்தரப்பு எடுத்த நடவ டிக்கைகள் - அவர்கள் தமக்கு எதிராக இதைக் கருதியதன் வெளிப்பாடாகவே எடுக்க வேண்டும்.

அதேவேளை, படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹர்த்தால் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த அதே வேளை, நெல்லியடியில் ஏழு அப்பாவி இளைஞர்கள் படு கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

இரண்டு ஓட்டோக்களில் சென்ற இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட பின்னர் - அவர்கள் மீது புலிப் பட்டம் சூட்டப்பட்டிருக்கிறது. இராணுவக் காவலரண் மீது ஆட்டோவில் வந்து அதுவும் ஏழுபேர் கைக்குண்டு வீசவேண் டிய அவசியம் இருக்கிறதா?

ஒருவர் நடத்தக்கூடிய தாக்குதலுக்கு ஏழுபேர் சென்றனர் என்றும், இதற்கு வேகம் குறைந்த ஓட்டோக்களைப் பயன்படுத்தியதாக கூறுவதும் நம்பத்தகுந்த கதையாகத் தெரியவில்லை.

திட்டமிட்ட அடிப்படையில் தான் இத்தகைய செயல்கள் இடம்பெறுகின்றன. இந்தச் செயல்கள் தொடர்பாக இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவோ அல்லது சர்வதேச சமூகமோ அதிகம் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.

நாளாந்தம் படுகொலை செய்யப்படும் அப்பாவித் தமிழ் மக்களின் சார்பாக குரல் கொடுக்க எவரும் இல்லையா? அல்லது இதைத் தடுக்கும் திராணி சர்வதேச சமூகத்துக்கு இல்லையா? என்ற கேள்வி எழுகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கூட - சட்டத்துக்குப் புறம்பாக கொலைகள் தொடர்பாக ஒரு அறிக்கையை அரசின் மீது கண்டித்து வெளியிட்டுவிட்டு - அரச தரப்பு நிர்ப்பந்தம் காரணமாக - அதிலிருந்து பின் வாங்கியிருக்கிறது.

இதன் மூலம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மீதான நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து போகும் நிலைதான் உருவாகியிருக்கிறது. சம்பவங்கள் தொடர்பாக விசாரித்து அறிக்கை வெளியிட்ட பின்னர்-

அது தவறென அரச தரப்பு நியாயங்களை கேட்டு அறிக்கையை மாற்றிக்கொண்டது, சம்பவ இடங்களில் செய்யப்பட்ட விசாரணைகள் பொய்யென்ற கருத்தையன்றோ உருவாக்கியிருக்கிறது.

கண்காணிப்புக்குழு, சர்வதேச சமூகம் என தமிழ் மக் கள் தமக்கு நியாயம் கிடைக்கும் என எந்தத் தரப்பு மீதும் நம்பிக்கை வைக்கமுடியாத நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையைச் சாதகமாக்கி தமிழ் மக்கள் அன்றாடம் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். இந்தப் படுகொலைகளுக்கு முடிவே இல்லையா? அதைத் தடுத்து நிறுத்த எவராவது முயற்சி எடுப்பார்களா என்ற ஏக்கத்தில்தான் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# ஆயுதக் கொள்வனவுப் பட்டியல் பாகிஸ்தான் அரசிடம் கையளிப்பு

கொழும்பு-

இந்தியாவிடமிருந்து ஆயுதங்களைப் பெறும் முயற்சி தோல்வியடைந்த நிலையில் தனது ஆயுதக் கொள்வனவுப் பட்டியலை பாகிஸ்தானிடம் இலங்கை அரசு அளித்துள்ளது.

இந்தியாவில் உள்ள உள்நாட்டுத் தமிழர்களைக் கணக்கில் கொண்டு இலங்கைக்கான உதவிகளிலிருந்து இந்தியா விலகிய நிலையில் இலங்கை அரசு பாகிஸ்தானை நாடியது.

கடந்த மாதம் பாகிஸ்தான் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இராணுவக் கொள்வனவு தொடர்பாக - குறிப்பாக விமானப் படைக்கான கொள்வனவு குறித்து விவாதித்துள்ளார். இதற்கான நீண்ட பட்டியலையும் அவர் கையளித்துள்ளார்.

விமானப்படைக்காகச் செய்திமதிப் படங்கள் மற்றும் இரண்டு ஆளில்லா விமானங்கள் உள்ளிட்ட நீண்ட ஆயுதக் கொள்வனவுப் பட்டியல் ஒன்றையும் பாகிஸ்தானிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கையளித்துள்ளார்.

கடந்த மாதம் மார்ச் முதலாம் திகதி இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதுவருக்கு முப்படைகளின் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி கடிதம் ஒன்றை அனுப்பினார். அதில் ரி - 55 ரக டாங்கிகள் மற்றும் சி-130 ஹேர்குலஸ் விமானம் ஆகியவற்றை உடனடியாக ஆய்வு செய்ய ஒரு தொழில்நுட்பக் குழுவை அனுப்பிவைக்க அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த தளபாடங்களினது உதிரிப்பாகங்கள் இலங்கைக்குத் தேவையானதாக இருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இறுதிப் போருக்குத் தயாராவதாக புலனாய்வுத் துறை தகவல்கள் கிடைத்த பின்னரும் எந்த ஒரு நடவடிக்கையையும் இந்தியா மேற்கொள்ளாமையினாலும், பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக உடனடியாக எந்தவித முடிவுக்கு வராமையினாலும் பாகிஸ்தான் பக்கம் தனது பார்வையை இலங்கை திருப்பியதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

பாகிஸ்தானுக்கு சமர்ப்பித்த இலங்கையின் ஆயுதக் கொள்வனவு பட்டியல்

### விமானப்படை

2 ஆளில்லா விமானங்கள், கிபிர் விமானங்களுக்கான வான் எரிகுண்டுத தொகுதிகள், 20 லேசர் வழிகாட்டிக் குண்டுகள், 30 ஆழ ஊடுருவிக் குண்டுகள், 80 மில்லி மீற்றர் ரொக்கட் எறிகணைகள் எரிகுண்டுடன் - 500

### இராணுவம்

10 பக்தார் சிகென் ரக ராங்கி எதிர்ப்பு வழிகாட்டி ஏவுகணை, 300 வழிகாட்டல் ஏவுகணைகள், 1000 வானொலித் தொடர்புச் சாதனங்கள்

### கடற்படை

5000 மோட்டார் குண்டுகள், 250 இரவு நேர காட்டித் தொகுதி.

# க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை பாடசாலைப் பெறுபேறுகள் சில!

யாழ்ப்பாணம்-

இளவாலை, சென்.ஹென்றீஸ் கல்லூரியைச் சேர்ந்த பின்வரும் மாணவர்கள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். இவர்கள் விபரம் வருமாறு -

கிறேசியர் சஞ்ஜீத் - 8ஏ-பி-சி, ஜெறோம் அன்ரன்யூட் பிரதீபன் 6ஏ-2பி-சி-எஸ், வின்சன் குணாளன் வின்சன் ஞானதயாளன் - 5ஏ-4பி-சி, செல்வராசா மார்சலோ பியோ - 3ஏ-4பி-3சி.

# காத்தமுத்தருக்கு அரச அதிபரின் பதில்!

பிரதம ஆசிரியர்,
நமது ஈழநாடு,
யாழ்ப்பாணம்.

தங்கள் பத்திரிகையில் உங்கள் 'பதில் என்ன?' என்று புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள பகுதியில் ''யாழ்ப்பாணத்தில் அரச நிர்வாகத்தின் கண்மூடித்தனமான போக்குகள்'' என்ற தலைப்பில் வெளியான செய்தியில் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் நடைபெறுகின்ற நிர்வாக நடவடிக்கைகள் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளமையைக் கருத்திலெடுத்து இந்த மாட்டத்தின் அரச அதிபர் என்ற வகையில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பிரதேச செயலகங்களுக்கு வருகின்ற பொதுமக்கள் தொடர்பில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக அரச பிரமாணங்கள், சுற்றறிக்கைகளுக்கு அமைவாக இருக்க வேண்டும் என்பதில் இரு கருத்து இருக்க முடியாது. இவ்ற்றை நடைமுறைப்படுத்துவதிலுள்ள யதார்த்த பூர்வமான தடைகளுக்கு மத்தியிலும் அநேகமான பிரதேச செயலகங்களில் திருப்தியளிக்கக்கூடிய வகையில் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அண்மைக் காலமாக இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது. இருந்த போதிலும், பொதுமக்களுக்கு நேர்மையான, உண்மையான, நட்புறவுடனான சேவை வழங்கப்பட வேண்டியதன் அவசியம் உணர்த்தப்பட்டு திருப்தியான சேவையைப் பெற்றுக் கொடுக்க உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய தேவையுள்ளதையும் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

பிரதேச செயலகங்களில் நிதி நடவடிக்கைகள் தொடர்பாகப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட விடயம் கவனத்தில் எடுக்கப்பட்டு அரச நிர்வாகச் சுற்றறிக்கைக் கமைய பிற்பகல் 3.30 மணிவரை நடைபெற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதோடு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ். மாவட்ட நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்த பின்பு மாவட்டச் செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள், கூட்டக் குறிப்புக்கள் ( இவை பகிரங்க ஆவணங்கள் அல்ல) காத்தமுத்தர் அண்ணையின் தகவலுக்காக இணைத்து அனுப்புகின்றோம். யாழ். மாவட்ட நிர்வாகம் சீராக நடைபெறுவதற்கு சகல முயற்சிகளும் அவ்வப்போது எம்மால் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். எமது மாவட்டத்தில் சீரான, ஒழுங்கான, வினைத்திறனுள்ள, மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதே எமது இலட்சியம். இது கூடிய விரைவில் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை நமக்கு உள்ளது.

இது விடயத்தில் தங்கள் ஒத்துழைப்புக்கு எனது நன்றிகள்.

கே.கணேஷ், அரச அதிபர்,
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பாதுகாப்பு ஒத்துழைப்பு விவகாரங்களில் பல்வேறு நாடுகளுடனும் உறவு!

## பாதுகாப்பு அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு ஒத்துழைப்பு விவகாரத்தில் பல நாடுகளுடன் நெருக்கமான தொடர்புகளை பேணி வருவதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா, உக்ரெய்ன், இஸ்ரேல் ஆகிய நாடுகளிடமிருந்து இலங்கை அரசாங்கம் ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்து வருவதாகவும் இந்த நாடுகளுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான விடயங்களில் அதிகம் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கை அரசாங்கம் பாகிஸ்தானிடம் இருந்து பெருமளவு ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளமை குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது பதிலளித்த அந்த அதிகாரி -

இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளை தாங்கள் வேறுபாடின்றி நோக்குவதாகவும் தமக்கு வேண்டிய உதவிகளை வழங்க முன்வரும் நாட்டிடம் இருந்து தமது தேவைகளை பூர்த்தி செய்து வருவதாகவும் குறிப்பிட்டார். (01)

# தற்கொலை குண்டுதாரி கர்ப்பிணிப்பெண் அல்ல

## மருத்துவ ஆய்வில் தகவல்

கொழும்பு —

கொழும்பில் உள்ள இராணுவ தலைமையகத்தில் இராணுவ தளபதி மீது தற்கொலை குண்டு தாக்குதலை நடத்திய பெண் கர்ப்பிணி என்று வெளியான தகவல்கள் தவறானவை என தெரியவந்துள்ளது.

முன்னதாக தற்கொலை குண்டுதாரி கர்ப்பிணிப் பெண் என்று அரசாங்கம் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தது.

எனினும், குறிப்பிட்ட தற்கொலைதாரியின் குருதி மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தி மருத்துவர்கள் அந்தப் பெண் கர்ப்பிணி அல்ல என்பதை உறுதிப்படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது. (01)

# நாட்டை விட்டு வெளியேறினார் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல்!

கொழும்பு —

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவால் எதிர்ப்புக்களின் மத்தியிலும் ரட்ணஜீவன் கூல் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார்.

எனினும், யாழ்.பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் கடுமையான எதிர்ப்பினால் தனது பணிகளை அவர் ஏற்கவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் வெளிநாடு ஒன்றில் அரசியல் தஞ்சம் பெறும் நோக்கில் ரட்ணஜீவன் கூல் தனது குடும்பத்தினருடன் சென்றிருப்பதாக தெரிகிறது.

# துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்பு

அம்பாறை —

அம்பாறை மாவட்டம் - நிந்தவூர் பிரதேசத்தில் நேற்று துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

திருக்கோவில் கடற்கரையோரப் பகுதியில் சடலம் ஒன்று இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து இந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட இளைஞர் திருக்கோவில் பிரதேசத்தை சேர்ந்த பாக்கியராசா ராஜ்குமார் (வயது21) என அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த இளைஞரின் தந்தை அவரை அடையாளம் காட்டினார்.

நண்பரைச் சந்திக்கச் செல்வதாக நேற்று முன்தினம் மாலை வீட்டிலிருந்து பாக்கியராசா ராஜ்குமார் சைக்கிளில் சென்றதாகக் கூறப்படுகிறது.

# தமிழர்கள் மீதான...

தலையடுத்தே தமிழ் மக்கள் மீது இத்தகைய பதிலடி நடவடிக்கைகையை மேற்கொண்டதாக அரசாங்கம் தெரிவித்தது. அப்படியானால் தமிழர்களை நாட்டினது மக்களாக அரசாங்கம் கருதவில்லை என்றுதான் தோன்றுகிறது. இத்தகைய தாக்குதல்களானது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையைத் தான் மேலும் வலுப்படுத்தும்.

சுனாமிப்பேரலையாலும் போரினாலும் ஏற்பட்ட பாதிப்புக்களை சீரமைக்க இருதரப்பினரும் இணைந்து செயற்படவேண்டியது அவசியமாகும். இதற்கான விதிமுறைகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ளன.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டியது அவசியமாகும். அவுஸ்திரேலிய அரசாங்கமானது வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவர இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை அரசாங்கமானது தமிழர்களது தலைமைப்பீடத்துடன் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை...

ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கிறது.

இது இலங்கை அரசின் திட்டத்துக்கு தோல்வியாகும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எந்தவொரு நாட்டிடமிருந்தும் இலங்கை அரசு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது குறித்து இந்தியா எதிர்ப்பு தெரிவிக்காது விடினும் வெளிநாட்டு ராணுவங்கள் தனிப்பட்ட ரீதியான கண்காணிப்பு நிலைகளை இலங்கையில் பொருத்துவதற்கு இந்தியா அனுமதிக்கப்போவதில்லை எனவும் கூறப்படுகிறது.

# விமானப்படை...

கடற்படையினர்-விமானப்படையின் எம்.ஐ.24 தாக்குதல் ஹெலிகளை உதவிக்கு அழைத்தனர்.

இதையடுத்து புலிகளின் படகுகள் என்று சந்தேகிக்கப்படும் படகுகள் கரையை நோக்கி பின்வாங்கவே கடற்படைப்படகுகள் துரத்திச்சென்றன.

இதன்போது கரையிலிருந்து கடற்படைப்படகுகளை நோக்கி கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

ட்ரக் வண்டியொன்றில் பொருத்தப்பட்டிருந்த கனரக பீரங்கி மூலமே தாக்குதல் நடத்தப்பட்டதை அவதானித்த விமானப்படை எம்.ஐ.24 ஹெலிகள் இதனைத்தாக்கி அழித்ததாக விமானப்படைப் பேச்சாளர் குறுப் கப்டன் அஜந்த டீ சில்வா தெரிவித்தார்.

அதேவேளை, முன்னதாக அரசாங்க சமாதானச்செயலகப் பணிப்பாளர் பாலித ஹொகன்ன இந்தத் தாக்குதலில் முதலாவது படகை கடற்படையினரும், இரண்டாவது படகை விமானப்படையினரும் தாக்கி அழித்ததாக கூறியிருந்தார்.

ஆனால், தாம் எந்தவொரு படகையும் தாக்கி அழிக்கவில்லை என விமானப்படை தெரிவித்தது.

இந்தத்தாக்குதலின்போது கடற்படைப்படகு ஒன்றின் மீது துப்பாக்கி சூட்டு சேதங்கள் ஏற்பட்டதாகவும், கடற்படையினர் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இந்தத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் தரப்பில் இருந்து எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

# ஒன்றுகூடல்

வடமராட்சி —

வடமராட்சி பிரதேச உளவளத்துணை நட்புதவியாளர்களுக்கான பயிற்சியும், ஒன்று கூடலும் நாளை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

# வவுனியா...

கிளைமோர் குண்டு வெடித்ததன் பின்னர் இராணுவத்தினரும் பொலிஸாரும். கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

மேலும் வவுனியாவின் அனைத்து வீதிகளும் படையினரால் மூடப்பட்டு தேடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.படையினரால் வீதிகள் மூடப்பட்டதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். எதுவித போக்குவரத்துக்களும் இடம்பெறவில்லை.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஆறு பேரில் ஐந்து பேர் உடனடியாக வவுனியா மருத்துவமனையிலிருந்து அனுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# கொன்ஸ்டபிள்...

ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு 100 மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலையடுத்து அப்பகுதியில் சுமார் ஒரு மணித்தியாலமாக போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டதுடன் படையினரால் தேடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

# நாவலர்...

உதயன் பத்திரிகை அலுவலகம் மீது கடந்த செவ்வாயன்று தாக்குதல் நடத்தப்பட்டதால், இந்தச் சம்பவம் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

யூனிவேசல்
(யாழ்/இந்து மகளிர் கல்லூரி அருகில்)
A/L - 2008
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்
06-05-2006
சனி காலை 7.00 மணி
[2263]
எமது முன்னணி ஆசிரியர்களின் சேவை.

D.C.M பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L - 2008
மாலை நேர வகுப்பு
பொருளியல் : வரதராஜன்
கணக்கீடு : பாலவாசன்
வணிகக்கல்வி : உமாகாந்த்
ஆரம்பம் : 08.05.06
திங்கள் மாலை 4.00 மணி
[5309]

# கடைகளைத் திறப்பதற்கு கைதடியில் படையினர் தடை

தென்மராட்சி

கைதடிச் சந்திப் பகுதியில் நேற்று வர்த்தக நிலையங்களைத் திறக்க வேண்டாமென படையினர் அச்சுறுத்தியதால், அந்தப் பகுதி வர்த்தகர்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து மேலும் தெரியவருகையில் -

நேற்றுக்காலை கைதடிச் சந்திப் பகுதிக்கு வந்த படையினர், அந்தப பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களை திறக்கவேண்டாமென அச்சுறுத்தியுள்ளனர்.

இதனால் நேற்று கைதடிச் சந்திப் பகுதியில் வர்த்தக நிலையங்கள் எதுவும் திறக்கப்படாது வெறிச்சோடிக் காணப்பட்டன.

நேற்றுமுன்தினம் யாழ்.குடாநாட்டில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட போது வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தது. எனவே, நேற்றும் கடைகளை மூடும்படி படையினர் வர்த்தகர்களை அச்சுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நுண்கலைப்பீட வளாகத்துக்குள் படையினர் அத்துமீறி நுழைவு!

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப்பீட வளாகத்தினுள் நேற்றுக்காலை அத்துமீறி உள்நுழைந்த இராணுவத்தினர் மாணவர்களை மிரட்டியுள்ளதுடன் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

மருதனார்மடத்திலுள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப்பீட வளாகத்தினுள் நேற்றுக்காலை 10.30 மணியளவில் 10க்கும் மேற்பட்ட படையினர் அத்துமீறி உள்நுழைந்து மாணவர்களை தீவிர சோதனைக்குட்படுத்தி விசாரணை செய்ததோடு தகாத வார்த்தைகளால் மிரட்டி அச்சுறுத்தியுள்ளனர்.

தொடர்ந்து வளாகத்தினுள் இருந்த பெண்கள் விடுதியினுள்ளும் அத்துமீறி உள்நுழைய முற்பட்ட வேளையில் மாணவர்களுக்கும்-இராணுவத்தினருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டு முறுகல்நிலை ஏற்பட்டது.

இதனைத்தொடர்ந்து வளாகத்தின் பின்பக்க மதிலேறிக்குதித்து வெளியேறிய படையினர் வளாகத்தைச் சூழவுள்ள பற்றைக்குள் மறைந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.குடாநாட்டில் தேடுதல்; 7 பேர் சந்தேகத்தில் கைது!

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் நேற்றுக்காலை ஊர்காவற்துறையிலும் கல்வியங்காட்டிலும் படையினர் நடத்திய தேடுதலின் போது 7 பேர் கைது செய்யப்பட்டதாகவும் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் இராணுவத்தரப்பு தெரிவித்தது.

கடற்படை, பொலிஸாரின் உதவியுடன் இராணுவத்தினர் நேற்றுக்காலை ஊர்காவற்துறையில் நடத்திய தேடுதலின் போது விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் எனச்சந்தேகத்தின் பேரில் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து பெருமளவு ஆயுதங்கள், வெடிபொருட்கள் மீட்கப்பட்டன. அதேவேளை கல்வியங்காடு பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலின் போது மேலும் இருவர் ரி.56 ரகத் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டனர் என படைத்தரப்பு தெரிவித்தது.

# தாக்குதல்களை...

அப்பாவி ஏழு இளைஞர் களைப் படுகொலை செய்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் தோன்றியுள்ள இந்த பயங்கர சூழல் காரணமாக பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி குடாநாடு தழுவிய அரச எதிர்ப்பு பணிப் புறக்கணிப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவ நிலைகள், முகாம்களுக்கு பக்கத்திலிருக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறும், மக்கள் கண்டபடி வீதிகளில் நடமாடுவதை நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நாம் எமது தாக்குதல்களை இந்தக் காலப்பகுதிகளில் தீவிரப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். எனவே, பொது அமைப்புக்களின் கோரிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி எமது தாயகப் பிரசேத்தில் இருந்து எதிரிகளைத் துரத்த எம் மண்ணையும், எம் மக்களையும் மீட்க பக்கபலமாக இருக்குமாறு மக்கள் படையாகிய நாங்கள் அன்பாக எமது உறவுகளிடம் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளைமோரில்...

பலாலியில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்று கொண்டிருந்த பொலிஸாரின் டபிள்கப் வாகனம் ஒன்றே தாக்குதலுக்குள்ளாகி வயலுக்குள் தூக்கி வீசப்பட்டது. இந்தச் சம்பவத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் நால்வர் படுகாயம் அடைந்தனர்.

காயமடைந்த நான்கு பொலிஸாரும் பலாலி இராணுவவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரியவருகிறது.

அதேவேளை இந்தத் தாக்குதலை தொடர்ந்து சம்பவ இடத்தில் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் சில மணி நேரம் மேற்படி வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை, இந்தச் சம்பவத்தில் இரு பொலிஸார் பலியானதாக இன்னொரு தகவல் தெரிவித்தது.

# அரச...

வெளிப்படுத்தவும் திட்டமிட்ட படுகொலைகளை அரசு நிறுத்தும் வரை அரச திணைக்களங்கள் பாடசாலைகள் நிதி நிறுவனங்கள் அனைத்தையும் மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை அரச பணிப்புறக்கணிப்பு போராட்டத்திற்கு யாழ் மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் யாழ் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மாணவர் ஒன்றியம் ஆகியன ஆதரவு தெரிவித்துள்ளதுடன்

அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை முடக்கும் பணிப்புறக்கணிப்பிற்கு முழுமையான ஆதரவு வழங்குவதுடன் தமது கல்விச் செயற்பாடுகளை புறக்கணிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.